கடன் மதிப்பெண் (கிரெடிட் ஸ்கோர்) என்றால் என்ன?

இது ஒரு மூன்று இலக்க எண் ஆகும், இது ஒரு வங்கிக்கு அல்லது கடன் வழங்கும் நிறுவனத்திற்கு உங்கள் கடன் தகுதியைப் பற்றிய கருத்தை அளிக்கிறது; அதாவது நீங்கள் செலுத்த வேண்டிய கடனை தவறாது திருப்பி செலுத்தி வருகிறீர்களா அல்லது இல்லையா என்பதை எடுத்துக்காட்டுகிறது. கடன் மதிப்பெண் நன்றாக இருந்தால், கடன் வழங்குபவர் நீங்கள் கடந்த காலத்தில் கடன்கள் அல்லது கிரெடிட் கார்டுகளைப் பயன்படுத்தி வாங்கிய கடனை சரியாகவும் முறையாகவும் செலுத்தியுள்ளீர்களா என்பதை புரிந்துகொள்ள உதவுகிறது. இது கடன் அல்லது கிரெடிட் கார்டு பெறுவதற்கான உங்கள் தற்போதைய விண்ணப்பத்தை அங்கீகரிக்க கடன் வழங்குபவருக்கு ஒரு நம்பிக்கையை அளிக்கிறது.

CRIF கடன் மதிப்பெண் என்பது பொதுவாக 300 முதல் 900 வரை இடைப்பட்டு இருக்கும். 300 என்பது மிகக் குறைந்த மதிப்பெண், இது மோசமான கடன் மதிப்பெண்ணைக் குறிக்கிறது மற்றும் 900 என்பது சாத்தியமான மிக அதிக மதிப்பெண் ஆகும். பொதுவாக 700 க்கு மேற்பட்ட மதிப்பெண் நல்ல மதிப்பெண் என்று கருதப்படுகிறது.

கடன் அறிக்கை (கிரெடிட் ரிப்போர்ட்) என்றால் என்ன?

கடன் அறிக்கை (கிரெடிட் ரிப்போர்ட்) என்பது கடன் பெறுபவரின் விரிவான கடன் விவரங்களைக் குறிக்கிறது. இதில் எடுத்துக்காட்டாக, தனிப்பட்ட விபரம் (உம். கடன் பெறுபவரின் பெயர், ஐடி எண், பிறந்த தேதி முதலானவை) மற்றும் ஒரு கடன் சுருக்கம் (உ.ம். கடன் வாங்குபவர் வைத்திருக்கும் கடன் கணக்குகள், அது நடப்பு/கெடு கடந்த கணக்குகளாக இருந்தாலும் சரி, மற்றும் கடன் வாங்குபவர் பற்றி சமீபத்தில் செய்யப்பட்ட கடன் விசாரணைகளின் பதிவாக இருந்தாலும் சரி) ஆகியவை அடங்கும்.

வெற்று CRIF கடன் அறிக்கை என்றால் என்ன?

CRIF தரவு தளத்தில் உங்களுக்குரிய எந்த தரவையும் எங்களால் கண்டறிய முடியவில்லை என்றால், நீங்கள் 'NH' அதாவது வரலாறு இல்லை அறிக்கையை பெறுவீர்கள்.

நான் எப்போது 11-18 மதிப்பெண் பெறுவேன்?

பின்வரும் சூழ்நிலைகளின் கீழ், நீங்கள் 11-18 க்கு இடைப்படயட மதிப்பெண்ணை பெற வாய்ப்புள்ளது.

நுகர்வோருக்காக:

பதினொன்று என்பது ஒரு மதிப்பெண் அல்ல, இது ஒரு விலக்கு குறியீடு ஆகும், இது 50-ஐ விட அதிகமான செயலில் உள்ள கணக்கு களைக் கொண்டுள்ள ஒரு தனிநபருக்கு வழங்கப்படுகிறது.

பன்னிரண்டு என்பது ஒரு மதிப்பெண் அல்ல, இது ஒரு விலக்கு குறியீடு ஆகும், இது எங்களால் வகைப்படுத்த முடயாத ஒரு தனிநபருக்கு வழங்கப்படுகிறது.

பதினான்கு என்பது ஒரு மதிப்பெண் அல்ல, இது ஒரு விலக்கு குறியீடு ஆகும், இது முந்தைய கடன் வரலாறு இல்லாதவருக்கு, ஆனால் ஒரு கடனுக்கு உத்தரவாதம் வழங்கப்படுகிறது.

பதினைந்து என்பது ஒரு மதிப்பெண் அல்ல, இது ஒரு விலக்கு குறியீடு ஆகும், இது போதுமான கடன் வரலாறு கிடைக்காத ஒரு தனிநபருக்கு வழங்கப்படுகிறது.

பதினாறு என்பது ஒரு மதிப்பெண் அல்ல, இது ஒரு விலக்கு குறியீடு ஆகும், இது 36 மாதங்களுக்கு முன்பாக அனைத்து கணக்குகளை மூடிவிட்ட மற்றும் விசாரணை தேதிக்கு முந்தைய 36 மாதங்களில் எந்த புதிய கடனையும் வாங்கி இருக்காத ஒரு தனிநபருக்கு வழங்கப்படுகிறது.

பதினேழு என்பது ஒரு மதிப்பெண் அல்ல, இது ஒரு விலக்கு குறியீடு ஆகும், இது வாடிக்கையாளர் பற்றிய போதுமான தகவல் கிடை க்காத நிலையில் வழங்கப்படுகிறது.

பதினெட்டு என்பது ஒரு மதிப்பெண் அல்ல, இது ஒரு விலக்கு குறியீடு ஆகும், கடந்த 36 மாதங்களில் ஒரு தனிநபரைப் பற்றிய எந்த புதுப்பிக்கப்பட்ட தகவலும் பெறமுடியாத நிலையில் இது வழங்கப்படுகிறது.

வணிகத்திற்காக:

பதின்மூன்று என்பது ஒரு மதிப்பெண் அல்ல. இது ஒரு விலக்கு குறியீடு ஆகும், இது பணியகத்தில் தொடர்புடைய புதுப்பிப்புகள் கிடைக்காத நிறுவனங்களுக்கு வழங்கப்படுகிறது.

பதினான்கு என்பது ஒரு மதிப்பெண் அல்ல, இது ஒரு விலக்கு குறியீடு ஆகும், இது மதிப்பிட முடியாத அளவிற்கு புதிய ஒப்பந்தங்களைக் கொண்ட நிறுவனங்களுக்கு வழங்கப்படுகிறது.

பதினைந்து என்பது ஒரு மதிப்பெண் அல்ல, இது ஒரு விலக்கு குறியீடு ஆகும், இது வணிக நிறுவனங்கள் அல்லாத கடன் பெறுபவர்களுக்கு வழங்கப்படுகிறது.

பதினாறு என்பது ஒரு மதிப்பெண் அல்ல, இது ஒரு விலக்கு குறியீடு ஆகும், இது வகைப்படுத்த முடியாத நிறுவனங்களுக்கு வழங்கப்படுகிறது.

பதினேழு என்பது ஒரு மதிப்பெண் அல்ல, இது ஒரு விலக்கு குறியீடு ஆகும், இது முந்தைய கடன் வரலாறு இல்லாத ஆனால் கடனுக்காக உத்தரவாதம் வழங்கிய நிறுவனங்களுக்கு வழங்கப்படுகிறது.

கிடைக்கக்கூடிய கடன் அறிக்கை விருப்பத்தேர்வுகள் என்ன மற்றும் அவற்றின் செலவுகள் என்ன?

CRIF ஹை மார்க்கிலிருந்து உங்கள் கடன் அறிக்கையை பெறுவதற்கு 3 விருப்பத்தேர்வுகள் உள்ளன:

இலவச கடன் அறிக்கை: ஆண்டுக்கு ஒரு முறை CRIF மூலம் ஒரு முழுமையான இலவச ஆண்டு கடன் அறிக்கையை பெறுவதற்கு உங்களுக்கு உரிமை உள்ளது. இந்த அறிக்கை நீங்கள் பார்ப்பதற்கு உடனடியாக கிடைக்கிறது.

கட்டண அறிக்கை (சந்தா திட்டங்கள் மூலமாக): நீங்கள் வாங்கியுள்ள திட்டத்தின் படி செல்லுபடியாகும் சந்தா காலத்தில் உங்கள் கடன் அறிக்கையை உடனடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். கிடைக்கக்கூடிய திட்டங்களாவன: 1 ஆண்டு, 6 மாதங்கள், மாதாந்திரம், ஒரு முறை என்பதாகும். அனைத்து சந்தா திட்டங்களும் கடன் மதிப்பெண்ணுடன் கூட கடன் அறிக்கையை உங்களுக்கு வழங்கும்.

கட்டண அறிக்கை (மதிப்பெண் இல்லாமல்): மேலும் நீங்கள் CRIF இலிருந்து ரூ.99 (பிரத்தியோக ஜிஎஸ்டி) செலுத்தி மதிப்பெண் இல்லாமல் உடனடியாக உங்கள் கடன் அறிக்கையை பெறலாம். இது ஒரு முறை பெறுவதாகும்.

தனிப்பட்ட கடன் மதிப்பெண் என்றால் என்ன?

தனிப்பட்ட கடன் மதிப்பெண் என்பது எந்தவொரு தனிநபரின் பொருளாதார ஆரோக்கியத்தின் அளவீடு ஆகும். இது கடனை நீங்கள் திருப்பிச் செலுத்துவதற்கான வாய்ப்பு எவ்வளவு என்பதுடன் தொடர்புடையது. வங்கிகளும் கடன் வழங்குநர்களும் உங்களுக்கு ஒரு கிரெடிட் கார்டு அல்லது கடன் வழங்க அங்கீகரிக்கலாமா என்பதைத் தீர்மானிக்க பயன்படுத்த உதவுகிறது. இந்தியாவில், கடன் மதிப்பெண் 300-900 என வரம்புகளில் இருக்கும். மதிப்பெண் 700க்கும் மேற்பட்டு இருப்பது சிறந்ததாக கருதப்படுகிறது.

வணிகக் கடன் மதிப்பெண் என்றால் என்ன?

வணிகங்களுக்கும் தனிநபர்களைப் போன்றே கடன் மதிப்பெண்கள் ஒதுக்கப்படுகின்றன. நிறுவனம் அல்லது வணிக கடன் மதிப்பெண் ஒரு நிறுவனத்தின் கடன் தகுதியை தீர்மானிக்கிறது - அதாவது, கடன்களைத் திருப்பிச் செலுத்தும் சாத்தியக்கூறு ஆகும். ஒவ்வொரு வங்கி அல்லது NBFC யும் உங்கள் வணிகத்திற்கு அல்லது நிறுவனத்திற்கு செயல்பாட்டு மூலதனக் கடன் அல்லது ஓர் உபகரணத்தை வாங்குவதற்கான கடனை அங்கீகரிப்பதற்கு முன்பாக கருத்தில் கொள்வது வணிகத்தின் கடன் மதிப்பெண் மற்றும் வரலாறு, அத்துடன் விளம்பரதாரரின் (தனிப்பட்ட) கடன் மதிப்பெண் ஆகும்.

CRIF வழங்கும் வணிக கடன் அறிக்கையை (BCR) நான் எவ்வாறு பெறுவது?

நீங்கள் வணிக கடன் மதிப்பெண் மற்றும் அறிக்கையை வெறும் 3 எளிய வழிமுறைகளில் பெற முடியும்,

வழிமுறை 1: வணிகம், பான், முகவரி, அங்கீகரிக்கப்பட்ட கையொப்பதாரரின் பெயர், அங்கீகரிக்கப்பட்ட கையொப்பதாரரின் பான், போன்ற உங்கள் வணிக விவரங்களை நிரப்பவும்.

வழிமுறை 2: டெபிட் அல்லது கிரெடிட் கார்டு / நெட் பேங்கிங் விவரங்களைப் பயன்படுத்தி உங்கள் அறிக்கைக்கான பணத்தை செலுத்தவும்.

வழிமுறை 3: பான், முகவரிச் சான்று, அங்கீகாரக் கடிதம் ஆகியவற்றின் நகல்களை ஸ்கேன் செய்து உங்கள் ஆவணங்களை பதிவேற்றம் செய்யவும்.

பகிர்ந்துகொள்ளப்பட்ட ஆவணங்களை வெற்றிகரமாக சரிபார்க்கப்பட்டதன் பேரில் 7 பணி நாட்களுக்குள்ளாக உங்கள் அறிக்கை உங்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

CRIF வழங்கும் தனிப்பட்ட கடன் அறிக்கையை (PCR) நான் எவ்வாறு பெறுவது?

நீங்கள் உங்கள் CRIF கடன் அறிக்கையை வெறும் 3 எளிய வழிமுறைகளில் பெற முடியும்,

வழிமுறை 1: உங்கள் விவரங்கள், அடையாளச் சான்றுகள், மற்றும் முகவரியை நிரப்பவும்: நீங்கள் முதலில் உங்கள் மின்னஞ்சல் ஐடியை வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுவீர்கள், பின்னர் ஒரு படிவம் வழங்கப்படும், அதில் முழு பெயர், மொபைல் எண், பிறந்த தேதி, வசிப்பிட முகவரி மற்றும் பாலினம் போன்ற மீதமுள்ள விவரங்கள் தேவைப்படும். மேலும் நீங்கள் பான் எண், வாக்காளர் ஐடி, கடவுச்சீட்டு எண், ஓட்டுநர் உரிமம் அல்லது ஏதேனும் பிற ஐடி போன்ற உங்கள் அடையாள விவரங்களையும் சமர்ப்பிக்க வேண்டும்.

வழிமுறை 2: உங்கள் அறிக்கை வகையை தேர்வு செய்யவும்: உங்களுக்கு மூன்று விருப்பத்தேர்வுகள் உள்ளன;

இலவச கடன் அறிக்கை: ஆண்டுக்கு ஒரு முறை CRIF மூலம் ஒரு முழுமையான இலவச ஆண்டு கடன் அறிக்கையை பெறுவதற்கு உங்களுக்கு உரிமை உள்ளது. இந்த அறிக்கை நீங்கள் பார்ப்பதற்கு உடனடியாக கிடைக்கிறது.

கட்டண அறிக்கை (சந்தா திட்டங்கள் மூலமாக): நீங்கள் வாங்கியுள்ள திட்டத்தின் படி செல்லுபடியாகும் சந்தா காலத்தில் உங்கள் கடன் அறிக்கையை உடனடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். கிடைக்கக்கூடிய திட்டங்களாவன: 1 ஆண்டு, 6 மாதங்கள், மாதாந்திரம், ஒரு முறை என்பதாகும். அனைத்து சந்தா திட்டங்களும் கடன் மதிப்பெண்ணுடன் கூட கடன் அறிக்கையை உங்களுக்கு வழங்கும்.

கட்டண அறிக்கை (மதிப்பெண் இல்லாமல்): மேலும் நீங்கள் CRIF இலிருந்து ரூ.99 (பிரத்தியோக ஜிஎஸ்டி) செலுத்தி மதிப்பெண் இல்லாமல் உடனடியாக உங்கள் கடன் அறிக்கையை பெறலாம். இது ஒரு முறை பெறுவதாகும்.

வழிமுறை 3: உங்கள் விசாரணையை அங்கீகரிக்கவும்: நீங்கள் அனைத்து விவரங்களையும் நிரப்பிவிட்டு உங்கள் அறிக்கை வகையை தேர்வு செய்ததும், உங்கள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு, பல தேர்வு கேள்விகளுக்கு பதில் அளிக்க கேட்டுக்கொள்ளப்படுவீர்கள். உங்கள் கடந்த கால கடன்கள் அல்லது கிரெடிட் கார்டுகள் அடிப்படையில் நீங்கள் மூன்று கேள்விகளின் தொகுப்பைப் பெறுவீர்கள். இந்த மூன்று கேள்விகளில் ஒன்றிற்கு வெற்றிகரமாக பதில் அளித்தவுடன், உங்கள் பதிவுசெய்யப்பட்ட மின்னஞ்சல் ஐடி மீது உங்கள் அறிக்கை உங்களுக்கு வழங்கப்படும்.

மேலும் தகவலுக்கு, நீங்கள் எங்கள் வலைப்பதிவையும் படிக்கலாம் https://blog.crifhighmark.com/how-to-find-your-crif-credit-score/

பதிவிறக்கம் செய்யப்பட்ட கடன் அறிக்கை கடவுச்சொல் கொண்டு பாதுகாக்கப்பட்டுள்ளதா?

ஆம். பதிவிறக்கம் செய்யப்பட்டது கடவுச்சொல் கொண்டு பாதுகாக்கப்பட்டுள்ளது. கடவுச்சொல் 8 எளித்துகளைக் கொண்டதாகும். அது நீங்கள் உள்ளிட்ட விவரங்களில் உள்ளபடி உங்கள் பெயரின் முதல் நான்கு எழுத்துகளின் சிறிய எழுத்துகளும், உங்கள் மொபைல் எண்ணின் கடைசி 4 இலக்கங்களும் இணைந்த கலவையாகும். எடுத்துக்காட்டாக, உங்கள் பெயர் விவரங்களில் உள்ளபடி இ.ஓ. அஒஅங KUMAR என்றும் மொபைல் எண் 9900123456 என்றும் இருக்கும் நிலையில் கடவுச்சொல் C.K.3456 என்பதாக இருக்கும்.

நான் எவ்வாறு எனது கடவுச்சொல்லை மீட்டமைப்பது?

நீங்கள் உங்களுடைய கடவுச்சொல்லை மறந்துவிட்ட நிலையில், உள்நுழைவு விருப்பத்தை கிளிக் செய்து, பாப்அப்-ல் தோன்றும் இணைப்பில் எனக்கு எனது கடவுச் சொல் நினைவில் இல்லை என்ற ஒன்றை தேர்வு செய்யவும்.

நான் எனது CRIF கடன் அறிக்கை நகலை எப்படிப் பெறுவது?

நீங்கள் ஒரு மின்னஞ்சல் கோரிக்கையை customerservice@crifhighmark.com க்கு அனுப்ப வேண்டும். தயவுசெய்து மின்னஞ்சலில் தலைப்பு பொருளாக உங்கள் அறிக்கை ஐடியை குறிப்பிடவும் மற்றும் உங்கள் CHM பியூரோ அறிக்கையின் நகலை கேட்கவும்.

கடன் மதிப்பெண் எவ்வளவு அடிக்கடி புதுப்பிக்கப்படுகிறது?

பொதுவாக, வங்கிகள் மற்றும் பிற நிதிசார் நிறுவனங்கள் நுகர்வோர் கடன் தகவலை இருவாரங்களுக்கு ஒருமுறை CRIF-க்கு சமர்ப்பிக்கின்றன. தனது உறுப்பினர்களிடமிருந்து இந்தத் தரவு பெறப்பட்டதன் பேரில், அதற்கேற்ப CRIF கடன் தகவல் அறிக்கையை (CIR) புதுப்பிக்கப்படுகிறது.

கடன் மதிப்பெண்ணை பாதிக்கக்கூடிய காரணிகள் என்ன?

CRIF கடன் மதிப்பெண்ணை பாதிக்கக்கூடிய ஐந்து முக்கிய காரணிகள் உள்ளன:

1. பணச்செலுத்த வரலாறு: நீங்கள் எத்தனை தடவை சரியான நேரத்தில் உங்கள் மாதத்தவணை அல்லது கிரெடிட் கார்டு நிலுவைத்தொகையை திருப்பிச் செலுத்துகிறீர்கள்? தாமதமான பணச் செலுத்தம் என்பது குறைந்த கடன் மதிப்பெண்ணிற்கு வழி வகுக்கிறது.

2. அதிக கடன் பயன்பாடு: உங்கள் மொத்த கடன் தொகையில் நீங்கள் எவ்வளவு பயன்படுத்தி உள்ளீர்கள்? உங்கள் கிரெடிட் கார்டின் தற்போதைய நிலுவையில் அதிகரிப்பு என்பது திருப்பிச் செலுத்தும் சுமை அதிகரிப்பைச் சுட்டிக்காட்டுகிறது. மேலும் இது உங்கள் மதிப்பெண்ணை எதிர்மறையாக பாதிக்கலாம்.

3. கடன் வரலாற்றின் நீளம்: உங்கள் கடன் வரலாறு எவ்வளவு காலத்திற்கு உள்ளது? பொறுப்புமிக்க கடன் பயன்பாட்டின் நீண்டகால வரலாறு அதிக மதிப்பெண் பெறுவதற்கு வழிவகுக்கிறது.

4. கடன் கலவை: உங்களிடம் ஒன்றுக்கு மேற்பட்ட கடன் வகைகள் உள்ளனவா? வெவ்வேறு வகையான கடன்களின் அனுபவம் பெற்றிருப்பது (உ.ம். கார் கடன், வீட்டுக்கடன், அல்லது கிரேடிட் கார்டு) உங்கள் மதிப்பெண்ணிற்கு உதவலாம்.

5. புதிய கடன்: நீங்கள் புதிய கடன் வகைகளைத் திறந்துள்ளீர்களா? குறுகிய காலத்தில் வெவ்வேறு கணக்குகளை திறப்பது என்பது உங்கள் கடன் மதிப்பெண்ணை குறைக்கலாம்.

மேலும் தகவலுக்கு, நீங்கள் எங்கள் வலைப்பதிவையும் படிக்கலாம்: https://blog.crifhighmark.com/everything-that-can-and-cant-affect-your-credit-score

உங்கள் CRIF அதிக மதிப்பெண் கடன் தகவல் அறிக்கை (சிஐஆர்) குறித்து ஏதேனும் புகார் / தகராறு உள்ளதா?

1. உங்கள் கடன் தகவல் அறிக்கையில் உள்ள CRIF ஹை மார்க் குறிப்பு எண்ணைப் பார்க்கவும். (இந்த எண் உங்கள் CRIF ஹை மார்க் கடன் தகவல் அறிக்கையில் மேல்புறத்தில் வலது மூலையில் உள்ள HM Ref #: என்னும் லேபிலுக்கு பக்கத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும்).

2. ஒரு மின்னஞ்சல் customerservice@crifhighmark.com க்கு அனுப்பவும் (அல்லது 020 67157760/88 என்ற எண்ணில் எங்களை தொடர்பு கொள்ளவும்), தலைப்பு பொருள்பகுதியில் CRIF ஹை மார்க் குறிப்பு எண்ணைக் குறிப்பிடவும். உங்கள் மின்னஞ்சலில் (கடன் தகவல் அறிக்கையில் உள்ள கணக்கின் வரிசை எண், புகாருக்குரிய கணக்கு தகவல் ஆகியவை), உங்கள் தொடர்பு எண் மற்றும் பெயர் போன்றவற்றை உங்கள் புகார் மின்னஞ்சலில் குறிப்பிடவும்.

3. CRIF ஹை மார்க் ஒரு டிக்கெட் எண்ணை உங்களுக்கு அனுப்பும், அதை மேற்கொண்டு CRIF ஹை மார்க் உடன் அடுத்துவரும் உரையாடல்களின் போது குறிப்பிடலாம்.

4. உங்கள் புகார் பெறப்பட்ட 30 நாட்களுக்குள்ளாக, உங்கள் அளிக்கப்பட்ட புகாரின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் முடிவுகளின் அடிப்படையில், CRIF ஹை மார்க், புகார் அளிக்கப்பட்ட தவறானது CRIF ஹை மார்க் செயல்முறை காரணமாக ஏற்பட்டிருந்தால் CRIF ஹை மார்க் இடம் அசல் விசாரணை மேற்கொண்ட கடன் நிறுவனத்திற்கு திருத்தப்பட்ட கடன் தகவல் அறிக்கையை வழங்கும்; அல்லது கடன் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட தரவுகளால் புகார் அளிக்கப்பட்ட தவறானது ஏற்பட்டிருந்தால் திருத்தப்பட்ட கடன் தகவலை நாடும்.

5. மேற்கண்ட செயல்முறை நிறைவடைந்ததும், CRIF ஹை மார்க் உங்கள் புகார் தொடர்புடைய டிக்கெட் எண்ணை மூடிவிடும். கண்காணிக்கும் அதிகாரி (அதாவது இந்தியாவின் நிதிசார் நிறுவனம்) தகவல் யாருக்கு உரியதோ அவருக்கு தெரிவிக்கப்படும்.

மேலும் தகவலுக்கு, தயவுசெய்து எங்கள் வலைப்பதிவுக்கு வருகைபுரியவும் https://blog.crifhighmark.com/how-when-to-dispute-your-credit-information-report/

நான் எவ்வாறு எனது கடன் மதிப்பெண்ணை மேம்படுத்த முடியும்?

நீங்கள் உங்கள் CRIF கடன் மதிப்பெண்ணை நல்ல கிரெடிட் வரலாற்றை பராமரிப்பதன் மூலம் மேம்படுத்திக்கொள்ள முடியும், இது கடன் வழங்குபவர்களால் கடன் அங்கீகரிப்பிற்கு இன்றியமையாததாக அமையும். இந்த 7 வழிமுறைகளை பின்பற்றவும், இந்த 7 வழிமுறைகள் உங்களுக்கு சிறந்த மதிப்பெண்ணை பெற்றுத்தர உதவுகிறது.

1. உங்கள் நிலுவைத் தொகையை சரியான நேரத்தில் செலுத்துங்கள்: உங்கள் நிலுவைத் தொகையை சரியான நேரத்தில் செலுத்தவும். நீங்கள் உங்கள் கிரெடிட் கார்டிலிருந்து செலவு செய்யும்போது, பயன்பாட்டைத் தொடரத் தேவையான குறைந்தபட்சத் தொகையை மட்டும் செலுத்தாமல், முழுமையாக செலுத்தவும் அல்லது அந்த மாதத்திற்கு நீங்கள் செலுத்தத்தக்க அதிகபட்ச தொகையை செலுத்தவும்.

2. உங்கள் கிரெடிட் கார்டுகளை குறைத்தல்: உங்கள் கடன் வரம்பை அதிகரிக்கச் செய்யவும் செலவு விகிதத்தைக் குறைப்பதற்கும் ஒரே நேரத்தில் 3 கிரேடிட் கார்டுகளுக்கு மேல் வைத்துக்கொள்ளாமல் இருப்பதுதான் சிறந்த வழியாகும்.

3. உங்கள் கிரேடிட் கார்டை பொறுப்புடன் பயன்படுத்துங்கள்: உங்கள் கடன் வரம்பின் 30-35% வரை உங்கள் செலவினங்களை கட்டுப்படுத்த வேண்டும் என்ற கட்டைவிரல் விதியுடன், உங்கள் கிரேடிட் கார்டை பயன்படுத்துவது ஒரு நல்ல நடைமுறையாகும்.

4. பழையது பொன் போன்றது: உங்கள் நிலுவைத் தொகையை முழுமையாகச் செலுத்தியவுடன் கணக்குகளிலிருந்து உங்கள் பதிவுகளை அழிக்க அவசரப்படாதீர்கள், ஏனெனில் சரியான நேரத்தில் மாதாந்திர தவணைகளை செலுத்துவது மதிப்பெண்ணை அதிகரிக்கச் செய்யும்.

5. உங்கள் கடன் விண்ணப்பங்களை கட்டுப்படுத்தவும் மற்றொரு வங்கியில் மீண்டும் விண்ணப்பிப்பதற்கு அவசரப்பாதீர்கள், ஏனெனில் அவர்கள் உங்கள் முந்தைய வங்கியால் நிராகரிக்கப்பட்டதைக் காணமுடியும். இது மேலும் உங்கள் கடன் மதிப்பெண்ணை பாதிக்கலாம் மற்றும் நிலைமையை இன்னும் மோசமாக்கும்.

6. விசாரணைகளின்போது எச்சரிக்கையாக இருக்கவும்: நீங்கள் தொடர்ந்து அதிகப்படியான கடனை நாடுகிறீர்கள் என்பதை நீங்கள் பிரிதிபலிக்க விரும்பவிலை; புதிய கடனிற்கு எச்சரிக்கையுடம் விண்ணப்பிக்கவும்.

7. உங்கள் மதிப்பெண் மீது கண்காணிப்பு வைக்கவும்: உங்கள் கடன் மதிப்பெண்ணை வழக்கமாக சரிபார்த்துக் கொள்வதும் ஒரு நல்ல மற்றும் தீங்கற்ற நடைமுறையாகும். இது உங்கள் பொருளாதார ஆரோக்கியத்தை கட்டுப்பாட்டில் வைத்திருக்க உங்களுக்கு உதவுகிறது, மேலும் அதற்கேற்ப அதனை சரிசெய்துகொள்ள போதுமான நடவடிக்கைகளை எடுக்கவும் உதவுகிறது. நீங்கள் CRIF சேவைகளைப் பயன்படுத்தி உங்கள் கடன் மதிப்பெண்ணை இலவசமாக சரிபார்த்துக்கொள்ளலாம் மற்றும் விரிவான அறிக்கையையும் பெற்றுக்கொ

மேலும் தகவலுக்கு, தயவுசெய்து, வருகைபுரியவும் https://blog.crifhighmark.com/7-surefire-ways-to-improve-your-credit-score/